Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
------

IN THE COURT OF

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.320/2018 |
| Sessions | : | |
| | | Prosecution |
| Deposition of witness for | : | Defence Pw-2 |
| | | Court |
| Name | .. | திருமதி.மஞ்சுளா |
| Husband's Name | .. | திரு.கஜேந்திரன் |
| Village | | |
| Taluk | .. | Thiruvottiyur |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 42 Date:13.05.2022 |

(Solmenly affirmed and oath taken under Act 10 of 1872)

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:-

அ.சா.1 என்னுடைய முதல் மகன். 15.07.2018 அன்று என் மகன் அ.சா.1 இரத்தம் சொட்ட சொட்ட என் வீட்டிற்கு வந்தார் என்று சொன்னால் சரிதான். அவரை யார் எதைக் கொண்டு தாக்கினார்கள் என்ற விபரத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் மகன் மீது தற்போது எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. என் மகனை சுமார் 7, 7.30 மணியளவில் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தேன். ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்த்தேன். என் வீட்டில் இருந்து ஸ்டான்லி மருத்துவமனை 1/2 மணி நேரம், 3/4 மணி நேரம் தூரத்தில் உள்ளது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காமல் ஆஜர் எதிரிகள் என் மகனை அடித்ததாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாத்தாங்காடு

காவல்நிலையத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.3 மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் அதை மறைத்து இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. அந்த வழக்கில் நானும் ஒரு குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரை என் மகனான அ.சா.1 கொடுத்ததால் அவருக்கு அனுசரணையாக இந்நீதிமன்றத்தில் ஆஜராகி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.